Registered as a Newspaper    பக்கங்கள் 4    விலை: ரூபா 5.00
நல்லூர் இனை நூலகம்
மாநகராட்சி மன்ற
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 12    [28-08-1993]    சனிக்கிழமை    ஓசை 191


## தற்காலிக எழுதுவினைஞர் நிரந்தரமாக்கப்படுவர்

தற்சமயம் யாழ். மாவட்டத்தில் சேவையில்உள்ள தற்காலிக எழுதுவினைஞர்கள் நிரந்தர நியமனமாக்கப்படவுள்ளனர். அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் இத் தகவலைத் தெரிவித்தார். மேற்படி எழுது வினைஞர்களை நிரந்தர நியமனமாக்கக் கோரி யாழ். அரச அதிபர் அரசுடன் நடாத்திய பேச்சுக்களை அடுத்து சுமார் 200 எழுதுவினைஞர்களும் விரைவில் நிரந்தர நியமன மாக்கப்படுவர் என உறுதியளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் யாழ். செயலகத்தினால் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

[பா], [க]

## (வலிமேற்கில் உக்கிரச் சண்டை)

# இராணுவத்தின் முன்னேறும் முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிப்பு!

## டாங்கிகள், பவல் கவசவாகனம் சேதம்

(யாழ்ப்பாணம்)

மாதகலில் இருந்து தெற்குநோக்கி இருமுனைகளில், விமானப்படை மற்றும் டாங்கிகளின் உதவியோடு முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. இப்பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் வரை முன்னேறி வந்த இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதலைத் தொடர்ந்து பெரும் இழப்புடன் இராணுவம் பின்வாங்கிச் சென்றது. புலிகளின் இவ் எதிர்த்தாக்குதலில் இராணுவத்திற்கு பலத்த உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவருவதோடு இரு டாங்கிகளும், ஒரு பவல் கவச வாகனமும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் மாதகல் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் விமானப்படையைச் சேர்ந்த 'புக்காரா' குண்டு வீச்சு விமானங்களின், ஹெலிகொப்டர்கள் உதவியுடன் சில்லாலை, சுழிபுரம் நோக்கி முன்னேறமுயன்றனர்.

அப்பொழுது விமானப்படை விமானங்கள் நடத்திய அகோர குண்டு வீச்சு, ரொக்கட் தாக்குதல் என்பனவற்றோடு, டாங்கிகளில்இருந்து பலத்த பீரங்கித் தாக்குதலும், முகாம்களில் இருந்துஅகோர எறிகணை வீச்சும் இடம் பெற்றது.

இவ்வாறாகத் தாக்குதல்நடத்தியவண்ணம் சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையில், முன்னேறி வந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் எதிர் கொண்டு உக்கிர தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து இம் மோதல் பிற்பகல் வரையும் நடைபெற்றது.

இம் மோதலில் விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதலினால் இராணுவத்திற்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை புலிகள் மேற்கொண்ட ஆர். பி. ஜி. தாக்குதலில் இரு டாங்கிகளும், ஒரு பவல் கவச வாகனமும் சேதமடைந்தன.

இவ்வாறு ஏற்பட்ட இழப்புக்களையும், பலத்த எதிர்த் தாக்குதலையும் தொடர்ந்து தமது முயற்சிகளைக் கைவிட்டு சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறிய இடங்களில் இருந்து தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்

## விமானப்படை அகோரத் தாக்குதல்

## ஐந்து பொதுமக்கள் பலி



## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கடற்படை தளபதி விரைவு

(கொழும்பு)

கிளாலி கடலில் கடந்த வியாழன் அதிகாலை கடற்புலிகளின் கரும்புலிகளின் தீரமிகு தாக்குதலில் சிறிலங்கா கடற்படையின் இரு ரோந்து படகுகள் மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதிக்கு சிறிலங்கா கடற்படைத் தளபதி மேஜர் சரசேகரா உட்பட பல கடற்படை அதிகாரிகள் குழுவொன்று விரைந்

[4ஆம் பக்கம் பார்க்க]

இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதலைத் தொடர்ந்து பெரும் இழப்புடன் இராணுவம் பின்வாங்கிச் சென்றது. புலிகளின் இவ் எதிர்த்தாக்குதலில் இராணுவத்திற்கு பலத்த உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவருவதோடு இரு டாங்கிகளும், ஒரு பவல் கவச வாகனமும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் மாதகல் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் விமானப்படையைச் சேர்ந்த 'புக்காரா' குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர்கள் உதவியுடன் சில்லாலை, சுழிபுரம் நோக்கி முன்னேற முயன்றனர்.

அப்பொழுது விமானப்படை விமானங்கள் நடத்திய அகோர குண்டு வீச்சு, ரொக்கட் தாக்குதல் என்பனவற்றோடு, டாங்கிகளில் இருந்து பலத்த பீரங்கித் தாக்குதலும், முகாம்களில் இருந்து அகோர எறிகணை வீச்சும் இடம் பெற்றது.


இவ்வாறாகத் தாக்குதல் நடாத்தியவண்ணம் சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையில் முன்னேறி வந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் எதிர் கொண்டு உக்கிர தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து இம் மோதல் பிற்பகல் வரையும் நடைபெற்றது.

இம் மோதலில் விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதலினால் இராணுவத்திற்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை புலிகள் மேற்கொண்ட ஆர். பி. ஜி. தாக்குதலில் இரு டாங்கிகளும், ஒரு பவல் கவச வாகனமும் சேதமடைந்தன.

இவ்வாறு ஏற்பட்ட இழப்புக்களையும், பலத்த எதிர்த் தாக்குதலையும் தொடர்ந்து தமது முயற்சிகளைக் கைவிட்டு சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறிய இடங்களில் இருந்து தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

இம் மோதலில் மூன்று புலிகள் வீரச்சாவடைந்தனர்.



கிளாலிக் கடலில் சிறிலங்கா கடற்படையின் இரு நீருந்து விசைப்படகுகளை மூழ்கடித்த மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் கரும் புலிகள் இருவரினதும், மூன்று கடற்புலிகளினதும் உருவப்படங்களை மேலேயும், இம்மோதலில் வீரச்சாவடைந்த 5 கடற்புலிகளின் புகழுடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதை கீழே உள்ள படத்திலும் காணலாம்.

# விமானப்படை அகோரத் தாக்குதல் ஐந்து பொதுமக்கள் பலி

(தொல்புரம்)

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை சுழிபுரம், சித்தன்கேணி மற்றும் அயலில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய அகோர குண்டு வீச்சுத் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். பலர் காயமடைந்தனர். விமானத் தாக்குதல் நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் விமானப்படையின் இரு புக்காரா விமானங்கள், சியாமாச்செற்றி குண்டு வீச்சு விமானம் மற்றும் உலங்கு வானூர்தி என்பன தாக்குதலை ஆரம்பித்தன. சுழிபுரத்தில் காலை 9.15 மணியளவில் புக்காரா விமானம் நெல்லியான் வீதியில் மேற்கொண்ட குண்டு வீச்சில் மூன்று பிள்ளைகளின் தந்தையான சிற்றம்பலம் இராமச்சந்திரன் (53) என்பவரும், காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது சுழிபுரம் நெல்லியான் வீதியில் வசிக்

[4ஆம் பக்கம் பார்க்க]

# பறாளாய் ஆலயம்மீது இராணுவ டாங்கி தாக்குதல்

(நமது நிருபர்)

சிறிலங்காவின் விமானப் படையும், இராணுவ டாங்கியும் நடாத்திய குண்டு வீச்சு தாக்குதல்களாலும் பீரங்கித் தாக்குதல்களாலும் சிவன் கோவில் ஒன்று தரைமட்டமானதுடன் முருகன் ஆலயமும் பலத்த சேதமடைந்தது

நேற்றுக்காலை 9-30 மணியளவில் பறாளாய் பகுதியை வட்டமிட்ட சியாமாச்செட்டி ரக குண்டு வீச்சு விமானம் ஒன்று ஜம்புனேஸ்வரர் சிவன் கோவில் மீது நடாத்திய குண்டு வீச்சினால் கோவில் தரை மட்டமாகியதுடன் விக்கிரகங்களும் சேதமடைந்தன.

இவ் ஆலயம் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போதும் விமானக் குண்டு வீச்சால் சேதமடைந்து அண்மையிலேயே புனரமைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து பறாளாய் முருகமூர்த்தி கோவில் வடக்கு புறமாக ஒருமைல் தொலைவு வரை முன்னேறிவந்த டாங்கி ஒன்று ஆலயம் மீது நடாத்திய அகோர பீரங்கி தாக்குதல்களினால் சித்திரத் தேரின் ஒரு பகுதி சிதறியது. இதன்சிதைவுகள் பரவலாக சிதறிக் காணப்படுகின்றன. தேர் மண்டபம் அதனை அண்டி அமைந்திருந்த

[4ஆம் பக்கம் பார்க்க]

# சாவகச்சேரியில் நீதிமன்றம் இன்று திறந்து வைப்பு

தமிழீழத்தின் இரண்டாவது நீதிமன்றம இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரியில் திறந்து வைக்கப்படும் என தமிழீழநீதி நிர்வாகப்பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

முதலாவது நீதி மன்றம் இம் மாதம் 21 ஆம் திகதி சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# விமானத் தாக்குதலில் காயமடைந்தோர்

சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய பரவலான குண்டு வீச்சு தாக்குதல்களினால் பதிற்று மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர்.

சித்தன்கேணிப்பகுதி குண்டு வீச்சினால் ராசேந்திரஐயர் சத்தியதாசன் [வயது 43], பொன்னம்பலம் தவச்செல்வம் (வயது 13) காயமடைந்தனர். சுழிபுரம் மேற்கு குண்டு வீச்சினால் வேலுப்பிள்ளை கிருஷ்ணவேணி [வயது 22], மார்க்கண்டு கிருபாகரன் [வயது26], இவரது சகோதரி நகுலாம்பிகை [வயது30], கிருஷ்ணபிள்ளை சின்னத்தங்கச்சி [வயது47] வேலாயுதம் சிறிதரஞ்சன் சில்லாலை மகேந்திரன் மோகனராணி 10 சுழிபுரம் கந்தராஜா (18) சில்லாலை ஆகியோரும் வேறு சிலரும் காயமடைந்ததாக தெரியவருகிறது.

# 3 புலிகள் வீரச்சாவு

மாதகல் பகுதியில் இருந்து நேற்றுக் காலை முன்னேற முயன்ற இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட உக்கிர மோதலில், மூன்று விடுதலைப்புலிகள் வீரச்சாவடைந்தனர். அவர்கள் விபரங்கள் வருமாறு;

★ லெப். பொறையன் (வேலாயுதம், ஸ்ரீதரங்கன் சில்லாலை பண்டதரிப்பு)

★ 2 ம் லெப். மருதவாணன் (இரத்தினசிங்கம், அறிவழகன் ஏழாலை மேற்கு, ஏழாலை)

★ 2 ம் லெப். பொழிலன் (நாகராசா - கணேஸ்வரன், வன்னேரிக்குளம், கிளிநொச்சி)

வீரச்சாவை தழுவிக் கொண்ட இப்போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# மாவீரர்களுக்கு அஞ்சலி

நேற்று மாதகலில் இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவு எய்திய மூன்று மாவீரர்களினதும் வித்துடல்கள் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு மல்லாகம் கொட்டைக்காடு கந்தையா தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடத்தப்பட்டு ஏழாலை மல்லாகம் வீதியூடாக புன்னாலைக்கட்டுவன் சந்தியை அடைந்து அங்கிருந்து உரும்பிராய் சந்தியை அடைந்து கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

# கடற்புலி மாவீரர்களுக்கு குடாநாடெங்கும் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் கிளாலியில் வீரகாவியம் படைத்து வீரச்சாவு அடைந்த இரு கடற்கரும் புலிகளின் உருவப்படங்களும், கடற்புலிகள் மூவரது வித்துடல்களும் நேற்றுக்காலை 7-30 மணிக்கு நாகர்கோவில் பகுதியிலிருந்து எழுதுமட்டுவாழ் வீதிவழியாக எடுத்துச் செல்லப்பட்டு 10 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது

பெருந்திரளான மக்கள் வீதிகளில் திரண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினர். இதைத் தொடர்ந்து கண்டிவீதியூடாக கைதடி, நாவற்குழி அரியாலை பகுதிகளூடாக பாஷையூர் வந்தடைந்தது. பிற்பகல் மூன்று மணிக்கு மாவீரர்கள் வித்துடல்கள் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரால் பாண்ட் வாத்திய இசையுடனும், அணிவகுப்பு மரியாதையுடனும் புகழுடல்கள் காங்கேசன்துறை வீதி, பலாலி

(4ஆம் பக்கம் பார்க்க)

# எந்தப் படை எடுப்பையும் எதிர் கொள்ளத் தயார்!

## பி.பி.ஸிக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

[கொழும்பு]

"டென்சில் கொப்பேக்கடுவ மரணமடைந்தவுடன் நாம் பெரும் வெற்றியை கண்டுவிட்டோம் என்று நினைக்கவில்லை. எந்த தன்மையோடும் எந்த தளபதிகள் வந்தாலும் அவர்களை எதிர்த்து வெற்றியீட்டக்கூடிய தன்னம்பிக்கையும் உறுதியும் எம்மிடம் உண்டு. அத்துடன் தேவைக்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு எந்தப் படையெடுப்புக்களையும் எதிர் கொள்ளக்கூடிய தயார் நிலையில் நாம் உள்ளோம்."

இவ்வாறு அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். இப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் இராணுவ படையெடுப்புக்களால் மக்கள் பலர் தற்காலிகமாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


**ரேடியோ, மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்**

எலெக்டிங்கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/ எலக்ரோனிக் கடிகாரங்கள் 90/-, 150/ மேசை சுவர்பணிக்கூடுகள் 100—200 ரேடியோ பட்டும் 150/- சகற ரேடியோ 200/- இவையாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கபடும். டில்கா வாசன் ரேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/7113)

**அடுப்பெரிக்க சிக்கன சாதனம்**

விறகுத் தட்டுப்பாடு என்ற விசனமா? சாம்பல் கரியின் தொல்லையா? அடுப்பெரிய வைக்க அதிக செலவு என்ற ஏக்கமா? கணகணப்பான வெப்பம் தரும் சாணி விறாட்டி - சிக்கனமானது. சிரமமற்றது விறாட்டி ஒன்று ரூ. 1/- மட்டுமே. "மில்க்வைற்"
(சி-7297)

**உடன் விற்பனைக்குண்டு**

2 மாதம் வளர்ந்த பிறவுண் சேவல் உடன் விற்பனைக்குண்டு 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.
(5793)

**இவரை மறக்காதீர்கள்**

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க எதிர்காலப் பலனறிய V. A. சிவராசா, 152 B, அரசடி றோட், கந்தர்மடம்.
(5792)

**நல்ல தென்னங்கன்று**

மாரிகால காலபோகத்திற்கான நல்லின தென்னங்கன்றுகள் நவிண்டிலில் உள்ள கடற்புலிகள் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால்வழங்கப்படுகிறது (யோ)

**நியூ யாழ் சைனீஸ்**

- ★ கோழிப் புரியாணி
- ★ நூடில்ஸ்
- ★ பிறைற்றைஸ்
- ★ சூப் வகைகள்
- ★ RICE & CURRY

மற்றும் சைனீஸ் உணவு வகைகளுக்கு

**நியூ யாழ் சைனீஸ்**

124 1 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (5768)


# 31-ம் நாள் நினைவஞ்சலி (28. 08. 93)



உதயம்
25-01-1919
மறைவு
29-07-1993

அமரர்

**DR. கதிரிப்பிள்ளை கந்தையா**

(சந்தை வீதி, காங்கேசன்துறை)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் ஒளிவிளக்காய் இருந்து திடீரென எம்மை ஆறாத்துயரில் மூழ்க வைத்து மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே - எங்கள் எல்லோரதும் குடும்பங்களினதும் ஒளிவிளக்கே - உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

கோண்டாவில் பாடசாலை வீதியில் உள்ள எமது இடம்பெயர்ந்த இல்லத்தில் நடைபெறும் அன்னாரது வீட்டுக்கிருத்தியங்களில் 1993-08-28-ம் தேதியான இன்று வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், தோழர்களை அழைக்கிறோம்.

பாடசாலை வீதி,
கோண்டாவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5790)

சங்கானை

ஐக்கிய நலன்புரிச் சங்க ஆதரவில்

# நாடகக் கலை விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இன்று 28-08-93 சனிக்கிழமை நடைபெற விருந்த சாந்தனின் "அச்சந்திரமயானகாண்டம்" கலை பண்பாட்டுக் கழகத்தின் "சந்தனக்காடு" ஆகிய நாடகங்களும் 04-09-93 சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு நடைபெறும். திகதி மாற்றத்தால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகிறோம்.

நா. கனகசபை [கட்சன்]
பொதுச் செயலர்
(5789)

அகில இலங்கை
இளங் கலைஞர் மன்றம்

# விறகுஎடுத்துசெல்வதற்கான கட்டுப்பாடுகள் அறிமுகம்

யாழ். குடாநாட்டு மக்களின் விறகுத் தேவையின் பெரும்பகுதி கடந்த காலங்களில் பிற மாவட்டங்களிலிருந்தே பெறப்பட்டு வந்தது விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்த வேளையில் போக்குவரத்து சீரின்மையால் யாழ் குடாநாட்டு மக்களின் விறகுத்தேவை யாழ் குடாநாட்டுக்குள்ளேயே முழுமையாகப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் விறகுத் தேவையின் பொருட்டு நீண்டகாலம் பயன்தரக்கூடிய மரங்கள் எல்லாம் கட்டுப்பாடு இன்றி வெட்டி அழிக்கப்படுகின்றது. சிறிலங்கா அரசும் எமது தேசத்தின் காட்டு வளத்தினை திட்டமிட்டு அழித்து வரும் அதேவேளையில் நாமும் அதனுடன் போட்டியிட்டு எமது வளத்தை அழிப்பது எவ்வகையில் பொருந்தும்? நாளை பிறக்கப்போகும் தமிழீழம் மரங்கள் அற்ற வளமற்ற ஒரு பூமியாகவா மீட்கப்படல் வேண்டும்? இதனைக் கருத்தில் கொண்டு எதிர்கால நோக்கோடு விறகுவளத் தறிப்பதை ஒழுங்குபடுத்துவதோடு மீள் நடுகையினையும் மேற்கொள்ளும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முன் வந்துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 01-09-93 -ம் திகதி முதல் கட்டுப்பாடு இன்றி மரம்தறித்தலைக் குறைப்பதற்காக விறகு கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறையினை அறிமுகப்படுத்தி அதனூடாக சூழலைப் பாதுகாக்க த.பொ.மே நிறுவனம் முனைகிறது. இதுசம்பந்தமான விதிமுறைகள் பின்வருமாறு.

1. கூடுதலாக காட்டுமரங்கள் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை தவிர்த்து ஒழுங்குபடுத்தும் வகையில் தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு விறகுகள் கொள்வனவாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

02.1 மேற்படி நிலையத்தில் கொள்வனவு செய்து கொண்டு வருவதற்கான அனுமதிப்பத்திரத்தை கொள்வனவாளர்கள் பனை வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

02.2 உள்ளூரில் ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு விறகு எடுத்துச் செல்வதாக இருந்தாலும், அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும் இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பப் படிவத்தை அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளரிடமிருந்து பெற்று பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும்.

03. போக்கு வரத்து அனுமதிப்பத்திரம் விண்ணப்பதாரியிடம் இருந்து விறகின் அளவிற்கேற்ப நிதி அறவிடப்படும். இந்த நிதி திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகள் மீள் நடுகைக்கு பயன்படுத்தப்படும்.

04. வழங்கப்படும் அனுமதிபத்திரமானது வழங்கப்பட்டு 24 மணிநேரத்திற்கு செல்லுபடியாகும். இதனை ஒரே ஒரு தடவை மட்டும் பயன்படுத்த முடியும். வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது விறகு கொண்டு செல்லும் முன்னரே காலாவதியாகும் போது அனுமதி வழங்கிய வட்டத் தொடர்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும்.

05. அனுமதியின்றி விறகு கொண்டு செல்பவர்கள் இனம் காணப்படும் பட்சத்தில் தமிழீழ காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடப் படும். இதற்காக கொண்டு செல்லும் விறகின் பெறுமதியின் 3மடங்கு பணம் அறவிடப்படுவதுடன் விறகும் பறிமுதல் செய்யப்படும்.

06. ஒவ்வொரு வட்டங்களிலும் நிதித்துறையால் பதிவு செய்யப்பட்ட விறகு விற்பனை நிலையங்களில் நுகர்வோர் தத்தமது தேவைக்காக கொள்வனவு செய்யும் போது அந்நிலையத்தால் வழங்கப்படும் பற்றுச் சீட்டுடன் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவர் (இதற்கு பிரத்தியேக அனுமதிப் பத்திரம் தேவைப்படாது)

07. தென்னை பனை மட்டைகள், தேங்காய் மட்டைகள், கதிபால்கள், ஊமல் போன்றன கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் பெறப்படத் தேவையில்லை.

08. காவல் துறையினரால் அனுமதிபெறப்படாதுகொண்டுவரப்பட்ட விறகுகள் பறிமுதல் செய்யுமிடத்து இந்த விறகுகள் அல்லது மரங்கள் பொது ஏலத்தில் விடப்படும்.

மேற் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மேலதிக விபரங்களை த. பொ. மே. நிறுவன வட்டத்தொடர்பாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# திருமலையில் நோயாளிகள் படையினரால் சோதனை

கொழும்பில் சிகிச்சைபெற்ற


கட்டைவேலி நெல்லியடிப.நோ கூ. சங்கம்

**கேள்வி**

கட்டைவேலி நெல்லியடி ப நோ. கூ. சங்கத்தின் மூன்று இசுசு லொறிகள் உள்ளன இவற்றிற்கு பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விகளைச் சமர்ப்பிக்கவும்:

01. முன்போணற் மட்காட் - பெயின்ட் அடித்தல்.
02. உருவுக்கு வாணிஸ்அடித்தல் -07 தரம்

சகல கேள்விகளும் பதிவுத் தபால் மூலம் கட்டைவேலி நெல்லியடி ப நோ கூ. சங்கம், கரவெட்டி எனும் விலாசத்திற்கு 05-09-93 ற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்.
25-08-93
(7288)


# நினைவு கூருகின்றோம்... 1993-08-28

1987ஆம் ஆண்டு இத்தினத்தில் முட்டு-ஓட்டமாவடிப்பகுதியில் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் தாக்கப்பட்டு பின்னர் உயிரோடு தீமூட்டிக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு இறால்குழியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய.

**வீ.என் பீல்ட்/ரவி** (மாணிக்கராசா முரளிதரன் - ஆலங்கேணி திருமலை)

1989ஆம் ஆண்டு மணலாற்றில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். கிருஷ்ணா** (சுப்பையா இராசதுரை-மடுக்குளம், பூவரசங்குளம்-வவுனியா)

மணலாறு-அளம்பில் வீதியில் இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டும் காணாமலும் போன பல தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு யாழ்-கோட்டையில் 21-08-1990 அன்று ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**பிரதீபன்** (பெனடிக்ற் றெக்ஸன்-எழுத்தூர்-மன்னார்)

யாழ்-கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**பவான்** (இராசன் இராசகுமார்-ஆட்டுப்பட்டி, துன்னாலை தெற்கு, கரவெட்டி-யாழ்)

அம்பாறை-வட்டமடுவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**மேகராசா** (— — கோணவில்-அக்கரைப்பற்று-அம்பாறை)

**செலவன்** (— — காரைதீவு-அம்பாறை)

**கபில்** (— — கல்லடி-மட்டு)

மட்டுவந்தாறுமூலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**சின்னவன்** (வேலுப்பிள்ளை தேவநாயகம்-களுவாஞ்சிக்குடி-மட்டு)

மட்டு-டோறிக்குடாவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**அன்பு/அருள்** (சுப்பிரமணியம் ஜெயரட்ணம்-கரவெட்டி மேற்கு-யாழ்)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண்உட்பட சில தமிழர்கள்.

மட்டு-வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சில தமிழர்கள். தானங்குடாப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன். சோனகன் வெட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட

தென்னங்கன்று

மாரிகால கால போகத்திற்கான நல்லின தென்னங்கன்று கன் நவிண்டிலில் உள்ள கடற்புலிகள் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால்வழங்கப்படுகிறது (யோ)


நியூ யாழ் சைனீஸ்

★ கோழிப் புரியாணி
★ நூடல்ஸ்
★ பிறைற்றைஸ்
★ சூப் வகைகள்
★ RICE & CURRY

மற்றும்
சைனீஸ்
உணவு வகைகளுக்கு

நியூ
யாழ் சைனீஸ்

124 1 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம் (5768)


## அறிவித்தல்

**கல்விப்பட்டப்பின் டிப்ளோமா ஆண்டுப்பரீட்சை 1992**

கல்விப்பட்டப்பின் டிப்ளோமா முழுநேரம், பகுதிநேரம்-1, பகுதிநேரம் - 11 ஆகிய மாணவர்கள் ஆண்டுப பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்களை பரீட்சைக்கிளையில் பெற்று பூர்த்தி செய்து உதவிப்பதிவாளர்/ பரீட்சைகள் அலுவலகத்தில் 1993 09 15 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்

பரீட்சைக்கிளை,
யாழ் பல்கலைக்கழகம்,
25 08 93

(சி/7298)

ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இன்று 28-08-93 சனிக்கிழமை நடைபெற விருந்த சாந்தனின் "அ ச்சந்திரமயானகாண்டம்" கலை பண்பாட்டுக் கழகத்தின் "சந்தனக்காடு" ஆகிய நாடகங்களும் 04 09-93 சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு நடைபெறும் திகதி மாற்றத்தால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகிறோம்.

நா. கனகசபை [கட்சன்]
பொதுச் செயலர்

(5789)

அகில இலங்கை
இளங் கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

"மணியம் வர்த்தக நிலையம்"
பலாலி வீதி
( திருநெல்வேலி ) ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: **29. 8. 1993** ஞாயிறு மாலை 5 மணி.

நிகழ்ச்சி நிரல்

மாலை 5 00—5 45 வயலின் இசை

செல்வி குமுதினி கனகரெட்ணம் — வயலின்
திரு. எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
திரு எஸ் துரைராஜா — கெஞ்சிரா

5 45—6 45 இசைக்கச்சேரி

திரு பொன். ஸ்ரீ வாமதேவன் — பாட்டு
திரு வி ஆர் இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. எம் சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு கே கண்ணதாசன் — கடம்

6 45—7,15 மங்கள விளக்கேற்றல்

1 திரு. ப. பாலசுப்பிரமணியம்,
உரிமையாளர்: மணியம வர்த்தக நிலையம், திருநெல்வேலி.

2 திரு சி கணேசராசா,
உரிமையாளர்: கணேசன் வர்த்தக நிலையம், மார்க்கட், திருநெல்வேலி.

தலைமையுரை: திரு. சா மதியாபரணம், ஜே பி,
(முன்னாள் புங்குடுதீவு ஊராட்சிமன்றத் தலைவர்)

பிரதமவிருந்தினர்உரை: திரு சி சிவலிங்கராசா, எம். ஏ
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

7. 15—8. 45 சிறப்பு நிகழ்ச்சி: தென்மராட்சி திலக நர்த்தனாலயம் வழங்கும்.

பரதநாட்டிய நிகழ்ச்சி

நட்டுவாங்கம்: நாட்டியக் கலைமணி, திருமதி யசோதா விவேகானந்தன்
பாட்டு: திரு. பொன். ஸ்ரீ வாமதேவன், திருமதி சௌந்தரவல்லி தர்மலிங்கம்
மிருதங்கம்: எஸ். துரைராசா
வயலின்: திருமதி தியாகேஸ்வரி சிவநாதன்

**இசை ஆர்வலர்கள் அபிமானிகள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**

பேற்றடி
மன்றத்தினர்.

(5788)

பனை செய்யப்படுவதை தவிர்த்து ஒரு முகப்படுத்தும் வகையில் தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு விறகுகள் கொள்வனவாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

02.1 மேற்படி நிலையத்தில் கொள்வனவு செய்து கொண்டு வருவதற்கான அனுமதிப்பத்திரத்தை கொள்வனவாளர்கள் பனை வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

02.2 உள்ளூரில் ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு விறகு எடுத்துச் செல்வதாக தேவைப்படாது)

07. தென்னை பனை மட்டைகள், தேங்காய் மட்டைகள், கதியால்கள், ஊமல் போன்றன கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் பெறப்படத் தேவையில்லை.

08 காவல் துறையினரால் அனுமதிபெறப்படாதுகொண்டுவரப்பட்ட விறகுகள் பறிமுதல் செய்யுமிடத்து இந்த விறகுகள் அல்லது மரங்கள் பொது ஏலத்தில் விடப்படும்.

மேற் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மேலதிக விபரங்களை த. பொ. மே. நிறுவன வட்டத்தொடர்பாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## திருமலையில் நோயாளிகள் படையினரால் சோதனை

கொழும்பில் சிகிச்சைபெற்ற வடபகுதியைச் சேர்ந்தவர்கள் திருக்கோணமலை துறைமுகத்தில் கடற்படையினரால் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

கடற்படையினர் துறைமுகத்தில் பிரயாணத்திற்கு தயாராக இருந்த பயணிகளின் பைகளை கடுமையாக சோதனை செய்ததுடன் வேறு கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் சிகிச்சை பெற்றவர்கள்குமண கப்பல்நேற்று முன்தினம்பருத்தித்துறை துறைமுகத்தைவந்தடைந்தனர் (தி)

## விடுதலைப்புலிகளுடன் பேசுக யாழ். அரச அதிபர்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் கட்டாயமாகப் பேச்சுவார்த்தை நடாத்தி சகல பிரச்சினைகளுக்கும் உடனடியாகத் தீர்வு காண வேண்டும்" இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து வெளியாகும் "ஐலண்ட்" என்ற சிங்கள நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் வெளியாகிய மேற்படி பத்திரிகையில் யாழ். அரசாங்க அதிபரின் இப் பேட்டியை அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து முன் பக்க தலைப்புச் செய்தியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## அருங்காட்சியகத்தில் புராதன பொருள்கள் திருட்டு

[கொழும்பு]

கொழும்பு அருங்காட்சி நிலையத்திலிருந்து பெறுமதியான பல புராதனப் பொருள்கள் திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொன் முலாம் பூசப்பட்ட இரு புத்தர் சிலைகள், பொன்னால் செய்யப்பட்ட தாயத்து மற்றும் பஞ்சாயுதம் ஆகியவையே கடந்த புதனன்று திருட்டுப் போயுள்ளன. இவை 900 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த முதலாம் பராக்கிரமபாகுஆட்சிக் காலத்தவை என்று கூறப்படுகிறது.

இந்தக் களவு 'உள்வேலை' என்ற சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இப் பொருள்கள் கடத்தப்படலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்கா விமானநிலைய அதிகாரிகள் ஜாக்கிரதையாக இருக்கும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

23ஆம் ஆண்டு
நிறைவு விழா

(கொழும்புத்துறை)

யாழ் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையத்தின் 23 ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:00 மணிக்கு நடைபெறும்.

இவ்விழாவில் சிறுவர்பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளதாக நிலையச் செயலாளர் திரு கோ. தியாகராசா அறிவித்துள்ளார். [42]

மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**மேகராசா** (— — கோணவில்-அக்கரைப்பற்று-அம்பாறை)

**செலவன்** (— — காரைதீவு-அம்பாறை)

**கபில்** (— — கல்லடி-மட்டு)

மட்டுவந்தாறுமூலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சின்னவன்** (வேலுப்பிள்ளை தேவநாயகம்-களுவாஞ்சிக்குடி–மட்டு)

மட்டு-டோறிக்குடாவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அன்பு/அருள்** (சுப்பிரமணியம் ஜெயரட்ணம்-கரவெட்டி மேற்கு-யாழ்)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண்உட்பட சில தமிழர்கள்.

மட்டு-வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சில தமிழர்கள். தாளங்குடாப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன். சோலங்கன் வெட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட இளம்பெண் இளைஞன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 தமிழர்கள். கரடியனாறு கித்துள், மாவிலையாறு இராஜபுரம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 04 தமிழர்கள் சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்விவசாயி.

யாழ்-நெல்லியடி, அச்சுவேலி வடக்குப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பெண்கள், கரவெட்டியைச் சேர்ந்த சிறுவன்-முகமாலையை சேர்ந்த இளைஞன் அல்வாய் மேற்கைச் சேர்ந்தோர் உட்பட 12 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு திருமலை-வேப்பங்குளம் முகாமிலிருந்து வெளியேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினரை பன்குளம் பகுதியில் வைத்து வழிமடக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**லெப். சிறிநாத்** (மயில்வாகனம் திருச்செல்வம்-592, செல்வநாயகபுரம் - திருமலை)

**2–ம் லெப் பீற்றர்** (ஆறுமுகம் பகவதசிங் - 4ஆம்கண்டம் பன்குளம் - திருமலை)

**சுதா** (செபமாலை பீரிஸ் ஜெகதீஸ்வரன் - கன்னியா- திருமலை)

**சிறிமனோ** (கணபதிப்பிள்ளை ராஜன் - திருஞானசம்பந்தர்வீதி- திருமலை)

தமிழீழக்கடற்பரப்பில் (பருத்தித்துறை) சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கடற்றொழிலாளியான தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி - பெரியமண்டலாய்ப் பகுதியில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் 09 காவலரண்கள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் இதயன்** (பிரான்சிஸ் ஜேசுநேசன்-அரிப்புமுருங்கன் மன்னார்)

**லெப். மன்றவாணன்** (கதிர்காமவேலன் சிறிகாந்தன்- மீசாலை தெற்கு -வேம்பிராய் கொடிகாமம்)

**லெப். தொல்காப்பியன்** (சுப்பிரமணியம் வசந்தருபன்- நீர்வேலி தெற்கு-யாழ்)

**கோமதன்** (மாணிக்கம் ஞானசேகரம் - மறவன்புலோ, கைதடி - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7296)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

ஒரு மாணவனால் சிந்திக்கக் கூடியதற்கு மேலாக அவனுக்குப்பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடாது

-ஆல்பிரெட் நார் வைட் ஹைற

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-08-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

# கடற்புலிகளின் வியத்தகு சாதனை

கிளாலிக் கடலில் மக்களைக் காக்கும் பணியில், கடற்புலிகளைச் சேர்ந்த இரண்டு கரும்புலிகள் உட்பட ஐந்து கடற்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். தன்னுயிர் தந்து மக்கள் உயிர் காத்த இத் தற்கொடையாளரின் தியாகம் மகத்தானது, மகிமை மிக்கது, இவர்களின் இவ் வீர காவிய வரலாறானது போற்றுதற்குரியது. இதனைப் படைத்தவர்கள் வணக்கத்திற்குரியவர்கள்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் சுதந்திர போராட்ட வீரவரலாற்றில் இத்தாக்குதலானது ஒரு மைல்கல், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடியது. சாதனைகள் பல நிறைந்த விடுதலைப் புலிகளின் வரலாற்றில் கடற்புலிகள் நிகழ்த்தியுள்ள இத்துணிகரமான தாக்குதல் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல, தமிழீழமெங்கும் உள்ள தமிழர்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கக் கூடியது.

மேலும் கடற்புலிகள் சிங்களப் பேரினவாதத்திற்கு கொடுத்த பலமான அடி இதுவாகும். அப்பாவித் தமிழ் பொதுமக்களின் உயிர்களுடன் விளையாட முனைபவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் வழங்கப்படும் 'பரிசு' இதுவாகவே இருக்கும் என்பதை சிங்களப் பேரினவாதம் இதன் மூலமாவது புரிந்து கொள்ள வேண்டும்.

சுமார் ஒருவருட காலமாக சிறிலங்கா கடற்படையினர், யாழ். கடல் நீரேரியில் நடத்திய வெறியாட்டமானது, கடல் நீரேரியை செந்நீராக்கியது. கடற்புலிகளின் சிறப்புத் தளபதி குறிப்பிட்டது போன்று, ''கிளாலிக் கடலில் ஓடுவது சாதாரண உப்புத் தண்ணீர் அல்ல. அது தமிழினத்தின் குருதி'' அந்தளவிற்குச் சிங்களக் கடற்படையின் வெறியாட்டம் இருந்தது.

ஆனால், இவ்வெறியாட்டம் கிளாலிக் கடற்பரப்பில், கடற்புலிகளின் பாதுகாப்பு இல்லாத வேளைகளிலேயே இடம் பெற்றது. இது இனப் படுகொலை என்ற நோக்கம் ஒன்றைமட்டுமே குறிக்கோளாக கொண்டிருந்தது. இந் நிலையில் தான் தமிழ் மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் நோக்கில் இக் கரும்புலித் தாக்குதல்கள் கடற்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்

# மட்டக்குளியில் தமிழர் டயர்போட்டு எரிப்பு

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளி லிஸ்டவைக் விளையாட்டு மைதானத்தில் டயர்போட்டு எரிக்கப்பட்ட நிலையில் தமிழ் இளைஞர் எனக்கருதப்படும் ஒருவரின் சடலம் பொலிஸாரால் கடந்த செவ்வாய்காலை கண்டுபிடிக்கப்பட்டது. முதல் நாள் இரவு இந்த இளைஞர் கொலை செய்யப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டிருக்கலாம். என சந்தேகிக்கப்படுகிறது.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க இவர் ஐந்தடி நான்கு அங்குல உயரமானவர் என்று தெரியவருகிறது இச்சடலத்தின் அருகில் இவர் பிரேமதாஸ கொலையில் சம்பந்தப்பட்டவர் இவரின் பெயர் ரவீந்திரன் என சிங்களத்தில் எழுதப்பட்ட சுவரொட்டி ஒன்று காணப்பட்டது. இச்சம்பவத்தினால் மட்டக்குளியில் பெரும் பதற்றநிலை காணப்பட்டது. ஜே.வி.பி கிளர்ச்சியின் பின்னர் கொழும்பு நகரில் இளைஞர் ஒருவர் டயர்போட்டு எரிக்கப்பட்டிருப்பது கடந்த காலத்தை ஞாபகப்படுத்துவதாக அப்பகுதி மக்கள் கூறினர்.

தமிழ்நாட்டிலிருந்து திரும்புவோர்

## தீவிர விசாரணையின் பின் மீளக் குடியமர்த்தப்படுவர்

(கொழும்பு)

தமிழ்நாடு கரையோரக் கிராமங்களில் உள்ள முகாம்களில் இடபோதும் விடுதலைப் புலிகள் தமிழ் இளைஞருக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதாக பாதுகாப்புப் படையினருக்கு நம்பகரமான தகவல் கிடைத்திருப்பதாகப் புலனாய்வுத் துறையினரை ஆதாரம் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் நாட்டில் தனிநாடு கோரும் தீவிரவாதிகளுக்கும், இலங்கைத் தமிழ் இளைஞருக்கும் விடுதலைப் புலிகள் சமகாலத்தில் பயிற்சி வழங்குவதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களிலுள்ள பெரும் எண்ணிக்கையினரான இலங்கை தமிழ் இளைஞர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்திருப்பது குறித்துத் தமக்குத் தகவல் எட்டியிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ் அகதிகளுடன் சேர்ந்து புலிகளும் ஊடுருவக் கூடும் என்பதால நாடு திரும்பும் அகதிகள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே குடியமர்த்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது சென்னையில் உள்ள அகதி முகாம்களில் தம்மைச் சேர்த்துக் கொண்ட விடுதலைப் புலிகள், அகதிகளுடன் அகதிகளாகச் சேர்ந்து நாடு திரும்பி, வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்குள் மெல்ல நழுவ முயற்சிப்பதாகவும் ஐலண்ட் செய்தி கூறுகிறது.

## பதவி உயர்வில் பாரபட்சம் பொலிஸ் அதிகாரி அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரை மீளவும் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்துவது குறித்துப் பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. திணைக்களச் சட்டதிட்டங்களுக்கு இது முரணானது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அதிகாரிகளுக்குச் சேவை நீடிப்பு வழங்குவது பற்றி அடுத்த மட்டத்தில் உள்ள இளைய பொலிஸ் அதிகாரிகள் மனவேதனை அடைந்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஏ. எஸ். பி. பதவிக்கு 65 பேர் நியமிக்கப்படவுள்ளார்கள். ஒரே தடவையில் 65 பேருக்கு ஏ. எஸ். பி. பதவி உயர்வு வழங்குவது இதுவே முதல் தடவையாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் படையில் இளைப்பாறும் வயது 50 என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், ஐம்பது வயதை எட்டியவர்களுக்கு வருடாந்தம் சேவை நீடிப்பு வழங்கபபடுகிறது

# கொட்டாஞ்சேனையில் பல இளைஞர்கள் கைது

[கொழும்பு]

கொழும்பு நகரில் உள்ள கொட்டாஞ்சேனைபகுதிசெவ்வாய்க்கிழமைஇரவு படையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரும், பொலிஸாரும் இச்சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர் என்றும் வீடுகள் விடுதிகள் மற்றும் பொது இடங்களில் உள்ள தமிழர்களில் பலதரப்பினரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவுப் பொழுது திடீர் என்று குறிப்பிட்ட பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் நூற்றுக்கணக்கான தமிழர்களை கைது செய்திருக்கின்றனர்

சந்தேகத்தின் பேரில் கைதானவர்கள் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## போர்க்கால கருத்தரங்கு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தில் இன்று 28-ம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 6மணிக்கு போர்க்கால கருத்தரங்கு ஒன்று நடைபெறும். விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் போர்க்காலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு இன்றைய நிலையில் பாதுகாப்புப் பற்றி கருத்துரை வழங்குவர். (யோ)

# வவுனியாவிலுள்ள தமிழ் அகதிகள் உணவுப்பொருளின்றித் தவிப்பு

## குழந்தைகள் பலவீனம்; சிலர் மயக்கம்

(வவுனியா)

தமிழ் நாட்டிலிருந்து திரும்பி வவுனியாவுக்கு அருகே வேப்பங்குளம், ஆசிகுளம் பகுதி நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வடபகுதி அகதிகள் கடந்த இருபத்து நான்கு தினங்களுக்கும்மேலாக உணவு நிவாரணம் எதுவும் கிடைக்காமல் பட்டினியால் வாடுகின்றனர். உணவுப் பஞ்சம் நாளுக்கு நாள் மோசமாகி வருவதுடன் அகதிகளில் சிலர் பட்டினி தாங்காமல் உடல் நலிவடைந்து போயிருப்பதாகவும் சிலர் மயக்கமடைந்து இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சுமார் 369 குடும்பங்களைக் கொண்ட வடபகுதியை சேர்ந்த இவர்களில் குழந்தைகள் எலும்பும் தோலுமாகக் காணப்படுகின்றனர் எனவும் குழந்தைகளுக்கான பால்மா பக்கட்டுகள் கூட ஒரு மாதத்திற்கும் மேலாகியும் கிடைக்கவில்லை எனவும் மேலும் கூறப்படுகிறது.

மேற்படி நலன்புரி முகாம்களை கண்காணிக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் (யு.என் எச். சி ஆர்) வெளிக்கள உத்தியோகத்தர் டேவிட் அட்றியான் அகதிகளின் நிலை குறித்து கவலை தெரிவித்திருப்பதுடன் பசியில் வாடும் இவர்களுக்கு உணவுப்பொருள்களை அனுப்பி வைக்கும்படி திறைசேரியையும புனர்வாழ்வு அமைச்சையும் கோரியுள்ளார்.

உயிர்ப்பாதுகாப்பு பற்றிய அச்சத்துடன் தான் இந்தியாவிலிருந்து கப்பல் ஏறினோம். ஆனால் நாங்களோ பசி பட்டினியால் தான் உயிரைவிடப் போகிறோம் போலுள்ளது என்று இம் முகாமிலுள்ள ஒருவர் தெரிவித்தார். தாயகம் திரும்பும் அகதிகளை பராமரிக்க வேண்டியது எமது பொறுப்பு ஆனால் திறைசேரியிலிருந்து உரிய நேரத்திற்கு நிவாரணம் வழங்குவதற்குரிய நிதி வந்து சேருவதில்லை இதினால்தான் அகதிகள் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்று வவுனியா பிரதேச செயலாளர் கூறியுள்ளார்.

ரஷ்யாவுக்கு

## ஏற்றுமதியாகிய தேயிலை திருப்பி அனுப்பப்பட்டது

[கொழும்பு]

ரஷ்யாவுக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்ட தேயிலை தரக்குறைவாக இருந்ததால் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தரம் குறைந்த தேயிலைத் துகள்களை ஏற்றுமதி செய்ய தேயிலைச் சபை அனுமதி வழங்கியதன் காரணமாகவே ரஷ்யாவுக்குத் தரம் குறைந்த தேயிலை அனுப்பப்பட்டதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக சட்டப் பேரவையின்

## எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பி. உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கோயம்புத்தூரில் நேற்றுமுன் [illegible] தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவரின் உண்ணாவிரதம் [illegible]

பாலஸ்தீனருக்காக

## காஸாவில் இடைக்கால நிர்வாகம் இஸ்ரேல் இணக்கம் தெரிவித்தது

(வாஷிங்டன்)

காஸாப் பகுதியில் இடைக் [illegible] லின் பொறுப்பிலேயே இருக்கும் எனவும் தெரிவித்தார், பாக முழு அளவிலான உடன்பாடு எட்டப்பட வேண்டும் [illegible]

...முன்னணிப் போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் வழங்கப்படும் 'பரிசு' இதுவாகவே இருக்கும் என்பதை சிங்களப் பேரினவாதம் இதன் மூலமாவது புரிந்து கொள்ள வேண்டும்.

சுமார் ஒருவருட காலமாக சிறிலங்கா கடற்படையினர், யாழ். கடல் நீரேரியில் நடத்திய வெறியாட்டமானது, கடல் நீரேரியை செந்நீராக்கியது. கடற்புலிகளின் சிறப்புத் தளபதி குறிப்பிட்டது போன்று, ''கிளாலிக் கடலில் ஓடுவது சாதாரண உப்புத் தண்ணீர் அல்ல. அது தமிழினத்தின் குருதி'' அந்தளவிற்குச் சிங்களக் கடற்படையின் வெறியாட்டம் இருந்தது.

ஆனால், இவ்வெறியாட்டம் கிளாலிக் கடற்பரப்பில், கடற்புலிகளின் பாதுகாப்பு இல்லாத வேளைகளிலேயே இடம் பெற்றது. இது இனப் படுகொலை என்ற நோக்கம் ஒன்றைமட்டுமே குறிக்கோளாக கொண்டிருந்தது. இந் நிலையில் தான் தமிழ் மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் நோக்கில் இக் கரும்புலித் தாக்குதல்கள் கடற்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடற்புலிகளின் கரும்புலித் தாக்குதல்களில் இது முதலாவது இல்லாது விடினும், நேரடியாக மக்களின் பாதுகாப்பு ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முக்கிய தாக்குதலாகும்

ஆனாலும், இத்தாக்குதலானது சிறிலங்கா ராணுவத்தின் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிடும் நோக்கத்திற்கு புலிகள் இராணுவ ரீதியாகக் கொடுத்த பலத்த அடியாகும், குடாநாட்டிற்கான தரை வழிப் பாதைகளை மூடியுள்ள சிறிலங்கா இராணுவம், கடல் வழிகளையும் தனது கடற்படையைக் கொண்டு மூடிவிடும் முயற்சிக்கு புலிகளால் இராணுவ ரீதியாக அளிக்கப்பட்ட பதில் என்றே கூற வேண்டும்

அத்தோடு, இனப்பிரச்சினைக்கு ராணுவதீர்வு என்ற சிறிலங்காவின் தீர்மானத்துக்கு கொடுக்கப்பட்ட மற்றுமொரு எச்சரிக்கையாகும். 1987 ஆம் ஆண்டு ஒப்பரேசன் லிபரேசன் தாக்குதல் நடவடிக்கையின் மூலம்வடமராட்சிக்குள் புகுந்த சிறிலங்கா இராணுவம் கரும்புலி கப்டன் மில்லரின் தாக்குதலினால் திகைத்துப்போனது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துக்கொள்வதுஎவ்வளவு ஆபத்தானது என்பதை அரசிற்கு அது உணர்த்தியது. இதேபோன்றதே இன்று கிளாலிக்கடற்பரப்பில் கடற்புலிகளின் கரும்புலிகள் மேஜர் நிலவன், கப்டன் மதன் ஆகியோர் மேற்கொண்ட தாக்குதல். தமிழர்களின் கடற்பரப்பு எத்துணை ஆபத்தானது என்பதைச் சிங்கள பேரினவாதத்திற்குப் புகட்டியுள்ளது.

அதாவது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கவும், அடிபணிய வைக்கவும் சிங்கள அரசாங்கம் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கையையும் விடுதலைப்புலிகள் அனுமதிக்கப் போவதில்லை என்பதை சிங்களப் பேரினவாதம் இதன் மூலம் புரிந்து கொள்ளவேண்டும், கடலிலும், தரையிலும், எங்காகினும் தமிழர் தாயகத்தில் எதிரி நிம்மதியாக உலாவர முடியாது. அதனை எதிர்க்கும் மனவுறுதியும், திறனும் புலிகளுக்கு உண்டு என்பதனை சிங்கள அரசு விளங்கிக்கொள்ளுதல் நல்லது. அதை புரிந்து கொள்ளத் தவறின் உலகிற்கு முன்னுதாரணமான அதே வேளை, பேரிழப்பை சிங்கள அரசு சந்திக்கவேண்டிய நிலைமைகள் பல உருவாவதை சிங்கள அரசு தவிர்க்க முடியாது போகலாம்.

---

...த்துப் பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. திணைக்களச் சட்டதிட்டங்களுக்கு இது முரணானது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அதிகாரிகளுக்குச் சேவை நீடிப்பு வழங்குவது பற்றி அடுத்த மட்டத்தில் உள்ள இளைய பொலிஸ் அதிகாரிகள் படவுள்ளார்கள். ஒரே தடவையில் 65 பேருக்கு ஏ. எஸ். பி. பதவி உயர்வு வழங்குவது இதுவே முதல் தடவையாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் படையில் இளைப்பாறும் வயது 50 என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், ஐம்பது வயதை எட்டியவர்களுக்கு வருடாந்தம் சேவை நீடிப்பு வழங்கபபடுகிறது

---

சுமார் 369 குடும்பங்களைக் கொண்ட வடபகுதியை சேர்ந்த இவர்களில் குழந்தைகள் எலும்பும் தோலுமாகக் காணப்படுகின்றனர் எனவும் குழந்தைகளுக்கான பால்மா பக்கட்டுகள் கூட ஒரு மாதத்திற்கும் மேலாகியும் கிடைக்கவில்லை எனவும் மேலும் கூறப்படுகிறது.

மேற்படி நலன்புரி முகாம்...

---

## ஏற்றுமதியாகிய தேயிலை திருப்பி அனுப்பப்பட்டது

(கொழும்பு)

ரஷ்யாவுக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்ட தேயிலை தரக்குறைவாக இருந்ததால் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தரம் குறைந்த தேயிலைத் துகள்களை ஏற்றுமதி செய்ய தேயிலைச் சபை அனுமதி வழங்கியதன் காரணமாகவே ரஷ்யாவுக்குத் தரம் குறைந்த தேயிலை அனுப்பப்பட்டதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

தமிழக சட்டப் பேரவையின்

## எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பி. உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கோயம்புத்தூரில் நேற்றுமுன் தினம் முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

கோயம்புத்தூரிலுள்ள தமிழகக் காவல்துறை அதிகாரிகள் தாம் அளித்த புகார் மனு ஒன்று தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டித்து. உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ள அவர் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவரின் உண்ணாவிரதம் பற்றி செய்தி நிறுவனம் ஒன்றின் மூலமாக அறிந்து கொண்ட மாநில ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி எதிர்க் கட்சித் தலைவருக்குப் பாதுகாப்பு வழங்குவது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மாநில நிர்வாகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## உண்ணாவிரதத்தை கைவிட வாழப்பாடி கோரிக்கை

தற்போதைய தமிழக அரசிடமிருந்து அரசியல் நாகரிகமான பலன் எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடவேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## எஸ். ஆர். பியைசந்தித்து மாவட்ட ஆட்சியர் உறுதிமொழி

கோவை மாநகர் காவல் துறையினரைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழகசட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தைநேற்று முன்தினமிரவு சந்தித்த மாவட்ட ஆட்சித் தலைவர் சி. வ. சங்கர் சம்பந்தப்பட்ட தலைமைக் காவலர் மீதும் அதிகாரிகள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எதிர்க்கட்சித் தலைவருக்கு பாதுகாப்பளிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதிமொழி அளித்தார்.

மேலும் சம்பந்தப்பட்ட காவலர் இடமாற்றம் செய்யப்பட்டு இருப்பதாகவும், அவர் மீது இலாகா சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கப்படுமென்வும் அவர் தெரிவித்தார்.

எனினும், சம்பந்தப்பட்ட காவல் துறை ஆய்வாளர் இடமாற்றம் செய்யப்படும் வரை தமது உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார்

### உண்ணாவிரதம்

திரு. எஸ் ஆர் பாலசுப்பிரமணியத்தை மூன்று ஆட்கள் மூலமாகக் கொலைசெய்யஎடுக்கப்பட்ட முயற்சியொன்றை கண்டுபிடித்தமைக்காககடைக்காரர் ஒருவரைப் பயமுறுத்தி மிரட்டியதாக ஒரு கான்ஸ்டபிளுக்கு எதிராகத் தமிழகச் சட்டப் பேரவை எதிர்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் புகார் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தப் புகார் மனு மீது காவல்துறை ஆய்வாளர் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்பதைத் தொடர்ந்தே எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

---

பாலஸ்தீனருக்காக

## காஸாவில் இடைக்கால நிர்வாகம் இஸ்ரேல் இணக்கம் தெரிவித்தது

(வாஷிங்டன்)

காஸாப் பகுதியில் இடைக்கால பாலஸ்தீன நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இஸ்ரேலிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

காஸாப் பகுதியையும், மேற்குக் கரையில் ஜெரிக்கோவை சுற்றியுள்ள பகுதியையும் இணைத்து, இடைக்கால பாலஸ்தீன நிர்வாகத்திடம்கையளிக்கஇஸ்ரேலிய அரசு இணக்கம்தெரிவித்திருப்பதாக இஸ்ரேலியவெளியுறவு அமைச்சர் ஷிமொன் பெரஸ் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் சி. என். என் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர் மேலும்கூறுகையில், இந்தப் பகுதிகளின் பாதுகாப்பு தொடர்ந்தும் இஸ்ரேலின் பொறுப்பிலேயே இருக்கும் எனவும் தெரிவித்தார், முன்னதாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேறுவது தொடர்பாக முழு அளவிலான உடன்பாடு எட்டப்பட வேண்டும் என்று பி. எல். ஓ விரும்புவதாக அதன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்

### யாசிர்அரபாத் பதவி விலக பி.எல்.ஓ. செயற்குழு கோரிக்கை

(ரியுனிஸ்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிதி நிலையையும், அரசியல் நிலைமையையும் மதிப்பீடு செய்வதற்கான முக்கிய கூட்டம் நேற்று ரியுனிசில் ஆரம்பமாகியது செயற்குழு உறுப்பினர்கள் பதினெட்டுப் பேரில் பதினான்கு பேர் கலந்து கொள்ளும் இந்த முக்கிய கூட்டத்தில் தலைவர் யாசிர் அரபாத்தும், அவரது சகாக்களும் பதவிவிலக வேண்டுமென வற்புறுத்தப்பட்டுள்ளது.

யாசிர் அரபாத் பேச்சுவார்த்தைகளின்போது இஸ்ரேலுக்கு அளவுக்கு அதிகமான சலுகை காட்டுகின்றார் என்றும், பி எல். ஓ விற்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க அவர் தவறிவிட்டார் என்றும் உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்,

---

### பாவலரேறு ஜாமினில் விடுதலை

(சென்னை)

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பாவலரேறு பெருஞ்சித்திரனாரை ஜாமீனில் விடுதலை செய்யும்படி சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

உடல் நிலையைக் கருத்தில் கொண்டு ஜாமினில் விடுதலை செய்யும்படி அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சிறப்பு நீதிமன்ற நீதிபதி வி. இராதாகிருஷ்ணன் அவரை ஜாமினில் விடுதலை செய்ய உத்தரவிட்டார். எனினும் தேவைப்படும் போது நீதிமன்றில் ஆஜராக வேண்டும் எனவும் அவ் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு ஞாபகார்த்தக் கூட்டமொன்றை ஒழுங்கு செய்த போதுபெருஞ்சித்திரனார் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

---

## ஐ. நாவின் தடைக்கு கடாபி கண்டனம்

லிபியா மீதான ஐ. நா. தடையை அந் நாட்டுத் தலைவர் கடாபி குறை கூறியிருக்கிறார்.

ஸ்கொட்டிவ் டெலிவிஷனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அரபு விமானங்கள் உதிரிப்பாகங்களைக் கொண்டுவருவது நின்றுவிட்டதாகவும், விமானங்களின் பாதுகாப்பைச் சோதனையிடும் தொழில்நுட்ப நிபுணர்களின் வருகை தடைப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

விமானக் குண்டு வெடிப்பு சம்பந்தமாக கடந்த டிசம்பர் மாதம் லிபியா மீது ஐ நா. தடை விதிக்கப்பட்டது. ஆனால் தடை காரணமாக இரு லிபிய ஏஜென்டுகளைத் தாம் மேற்கு நாடுகளிடம் ஒப்படைக்கப்போவதில்லை எனவும் கடாபி தெரிவித்தார்.

கடாபியின் குரல் சமரச முறையில் இருந்தது ஜனாதிபதி கிளிண்டனை 'எங்கள் நண்பர்' என அவர் வருணித்தார். அமெரிக்காவுக்கும் லிபியாவுக்குமிடையே ஒத்துழைப்பு சாத்தியம் குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் தட்சரைப்போன்றவரல்லர் என்றும் அவர் நல்ல மனிதர் என்றும் கடாபி கூறினார்.

---

**காடழிப்பு என்பது நாடழிவின் கட்டியம்**

# முன்னேற முயன்ற படையினர் இயக்கச்சியில் விரட்டியடிப்பு

## இராணுவ உபகரணங்கள் மீட்பு

(இயக்கச்சி)
இயக்கச்சி பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் நேற்றுக் காலை எறிகணைத் தாக்குதலை நடத்திய படி இரண்டு கிலோ மீற்றர் முன்னேறி வந்தனர். காலை 9 மணி முதல் முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்ட இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

மோதல்கள் பிற்பகல் 3.30 மணி வரை நீடித்தது. மோதலின் இறுதியில் இராணுவத்தினர் பின்வாங்கி சென்றனர். இதனைத் தொடர்ந்து படையினர் கடும் எறிகணை வீச்சை தொடர்ந்தனர். இதனால் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

முன்னேற முயன்ற படையினருக்கு உதவியாக உலங்கு வானூர்தி, இரு குண்டு வீச்சு விமானங்கள், மூன்றுக்கு மேற்பட்ட டாங்கிகள் என்பனவும் தாக்குதல் நடத்தின. இயக்கச்சி மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இம் மோதலில் : படையினரிடமிருந்து-
- ஐ எம் ரவைகள் - 403
- 60 எம் எம் ஷெல் - 02
- கண்ணீர் கான் - 01
- கிற்பாக் - 01 என்பன

புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# தென்மராட்சி பல இடங்களில் 'புக்காரா' குண்டு வீச்சு

(தென்மராட்சி)
தென்மராட்சியின் பல பகுதிகளிலும் சிறிலங்கா விமானப் படையினர் நேற்று குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் கிளாலி, முகமாலை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையினரின் இரு குண்டுவீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளன.

பல தடவைகள் மேற்படி பகுதியில் வட்டமிட்ட மேற்படி இரு விமானங்களும் மூன்று வெவ்வேறு பகுதிகளில் பல தடவை குண்டுகளை வீசின. இத் தாக்குதலின்போது பல தென்னைமரங்கள் சேதமடைந்தன.

மீண்டும் மாலை 4 மணியளவில் பச்சிலைப்பள்ளி, எழுதுமட்டுவாள், கிளாலி பகுதிகளை வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் குடியிருப்புகள் மீது தொடர்ந்து குண்டுகளை வீசின. இவை வீழ்ந்து வெடித்தபோதிலும் எதுவித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லையெனத் தெரிய வருகிறது.

## தென்மராட்சிமீது பரவலாக ஷெல்வீச்சு

# புலோப்பளையில் நால்வர் காயம் அதிர்ச்சியால் ஒருவர் மரணம்

(தென்மராட்சி நிருபர்)
இயக்கச்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும்மோதல் இடம்பெற்ற வேளையில் ஆனையிறவுராணுவமுகாமிலிருந்து தென்மராட்சியின் பல இடங்கள் மீது பலவித எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் மூவர் காயமடைந்தனர். அதிர்ச்சியினால் ஒருவர் மரணமடைந்தார்.

ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட இவ் எறிகணைகள் வண்ணாங்கேணி, கிளாலி புலோப்பளை போன்ற இடங்களில் வீழ்ந்து வெடித்தன.

இதில் புலோப்பளையில் வீழ்ந்து வெடித்த எறிகணையால், உழவு இயந்திரத்தில் மண்ணேற்றிக் கொண்டிருந்த மூவர் காயமடைந்தனர். உழவு இயந்திர ஓட்டுநரான மகாலிங்கம் என்பவரோடு மற்றும். வே. ஜெயகுருநாதன், செ. பாலேந்திரன் (20) மற்றும் மாரிமுத்து[58] அரியாலை ஆகியோரும் காயமடைந்தனர்.

இதேவேளை, இயக்கச்சியைச் சேர்ந்த வி. வேலாயுதம் என்பவர் அதிர்ச்சியின் காரணமாக மரணமடைந்தார். (86)

## கடற்படை

...துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைத் தளபதி தலைமையிலான இந்தக்குழு கிளாலியில் இரு கடற்படை நீருந்து விசைப்படகுகள் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே கடற்புலிகளின் கரும்புலிகளின் தாக்குதலினால் ஐந்து கடற்படையினர் பலியானதாகவும், நான்கு கடற்படையினர் காணாமற்போய்விட்டதாகவும், ஐந்து படையினர் காயமடைந்ததாகவும் கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கிளாலிக் கடலில் கடற்படை விரட்டியடிப்பு

[கிளாலி]
கிளாலியில் நேற்று முன்தினம் கடற்புலிகளின் கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் மூழ்கிய கடற்படையின் இரு நீருந்து விசைப்படகுகளையும். பலியான, படையினரையும் தேடும்பணியில் ஈடுபடமுயன்ற சிறிலங்கா கடற்படையினரின் மூன்று விசைப் படகுகள் மீது

## எந்தப்படை

...இடம்பெயர வேண்டியேற்படும் ஆனால் இவற்றைவிட எமது மக்கள் அரசின் பொருளாதாரத் தடைகளால் மிக மோசமான நெருக்கடிகளைச் சந்தித்த வண்ணம் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான காலம் வந்துவிட்டது என்று நீங்கள் கருதவில்லையாஎன்றுகேட்டபோது எமது மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். ஆனால் தற்காலிகமான சமாதானத்தையோ, தீர்வையோ விரும்பவில்லை. எமது இனத்துக்கான நிரந்தரமான, உறுதியான சமாதானத்தையே விரும்புகின்றனர். இந்த கௌரவமாகவும், உரிமையோடும். சுதந்திரமாகவும் வாழவே விரும்புகின்றனர், ஆனால் இலங்கை அரசு ஒரு தப்புக் கணக்கு போட்டுள்ளது எமது மக்கள் மீது படுகொலைகளையும், குண்டு வீச்சுக்களையும் தடைகளையும் ஏற்படுத்தினால் மக்கள் மத்தியில் போராட்டத்தின் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் விரக்தி ஏற்படும் என்று அரசு நம்புகிறது.

ஆனால் மக்களுக்கு இது உண்மையிலேயே வேகத்தையும், விடுதலையின் அவசியத்தையும் உணர்த்துகிறது. இதனால் போராட்டம் தீவிரப்படுவதையே எம்மால் காணமுடிகிறது என்றார்.

கிளாலி பாதை தொடர்பாக கேள்விக்குப் பதிலளிக்கையில் அது பொது மக்களால் நடத்தப்படும் படகுச் சேவை அதை நாம் ஒழுங்குபடுத்தி சரியான முறையில் ஒரு நிர்வாக ரீதியாக ஒழுங்குபடுத்துகின்றோம். கிளாலி கடனீரேரியால் போக்குவரத்து செய்யும் மக்களை அரசபடை தாக்குவதால் எமது கடற்புலி படையணி மக்களுக்கு அங்கு நின்று பூரண பாதுகாப்பை அளிக்கிறது எனத் தெரிவித்தார்.

விமானப்படை குண்டுவீச்சு குறித்து கேட்டபோது எமது முகாம்களும் அலுவலகங்களும் இந்த வெளிப்படையாகவே உள்ளது ஆனால் புலிகளின் இராணுவ இலக்குகள் எனக் கூறி பொதுமக்கள் வாழும் பகுதிகளையே குறியாக தாக்கப்படுகிறது. இதை நேரடியாக சென்று நீங்கள் பார்க்கலாம்.

மக்கள் வாழும் பகுதியில் முகாமை அமைக்கிறீர்களே? எமது இராணுவ நோக்குடனான முகாம்களை மக்கள் குடியிருப்பில் அமைக்கவில்லை ஆனால் நிர்வாக ரீதியாக மக்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நோக்கோடு உள்ள முகாம்களே மக்கள் வாழும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் எல்லாப் பகுதியிலும் மக்கள் செறிவாக வாழுகின்றனர் இங்கு காடுகளோ குடியிருப்பு அற்ற இடங்களோ குறைவு எனக்குறிப்பிட்டார்.

போர்க் கைதிகள் தொடர்பான கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அரசியல் துணைப் பொறுப்பாளர், கைதிகள் விடுதலை தொடர்பாக எமது இயக்கம் புதிய நிபந்தனை எதையும் விதிக்கவில்லை இப் பிரச்சினை சம்பந்தமாக எம்முடன் பேச்சு நடத்திய பிரிகேடியர் வீரசேகராவிடம் ஒரேயொரு கோரிக்கையையே முன்வைத்தோம். அதாவது வடபகுதிக்கு சில அத்தியாவசியப் பொருள்களை இங்கு அனுமதிக்குமாறு கேட்டிருந்தோம் அரசு இதற்கு முதலில் எழுதியது இது தொடர்பாக அரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கையும் ஆவணங்களும் எம்மிடம் உள்ளன ஆனால் அரசாங்கம் தான் தனது நிலைப்பாட்டை மாற்றி பொருளாதார தடையை அகற்ற மறுக்கது எனவே அரசு

## பறாளாய்

தேர்மட்டி அகியன சேகம



2 ம் லெப். மருதவாணன்



2 லெப். பொழிலன்



லெப். பொறையன்

# வலிமேற்கில் 'வீரச்சாவு

## கூட்டம்

[வடமராட்சி]
வடமராட்சிக் கோட்டத்தில் உடுப்பிட்டி வட்டத்தில் 7ஆம். 8ஆம் மாதங்களில் வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று 28ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் விடுதலைப் புலிகளின் நினைவுரைகளும் கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (பேர)

## ஷெல் வீச்சு

(குருநகர்)
நேற்று முன்தினமிரவு 10.45 மணியளவில் மண்டைதீவு படையினர் கரையோரமக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலினால் குருநகரில் ஒருவரின் வீடு சேதமடைந்தது அச்சமயத்தில் வீட்டில் எவரும் இருக்காததினால் உயிரிழப்பு ஏற்படவில்லை. (21)

## அறிவித்தல்

28-08-1993 இன்று கச்சாய் அரசினர் வித்தியாலய அரங்கில், பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக பழைய மாணவர் மன்றத்தினரால் நடாத்தப்பட இருந்த கலை விழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திப்போடப் பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறோம்.

செயலாளர்
பழைய மாணவர்கள் மன்றம்

[சி-7303]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்: 28-4 24
கிறிஸ்துவின் மடியில்: 28-7-93

## இரத்தினசிங்கம் பாக்கியம்

(முன்னாள் பூநகரி இன்ஸ்பெக்டர் தோட்ட உரிமையாளர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும் வளர்த்து, நல்வழி காட்டி, பாசத்துடன் சீராட்டி வளர்த்த எமது அன்பு மாமியே,எங்களை விட்டு பிரிந்து மாதம் ஒன்று போனாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மாறாது மறையாது. ஆகிலும் உங்கள் ஆத்மா ஆண்டவரிடம் சேர்ந்ததையிட்டு மன ஆறுதலடைகின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அனு

வலிகா இராணுவத்தினருக்கும் இடையில் கடும்மோதல் இடம்

கடற்படை

துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைத் தளபதி தலைமையிலான இந்தக்குழு கிளாலியில் இரு கடற்படை நீருந்து விசைப்படகுகள் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே கடற்புலிகளின் கரும்புலிகளின் தாக்குதலினால் ஐந்து கடற்படையினர் பலியானதாகவும், நான்கு கடற்படையினர் காணாமற்போய்விட்டதாகவும், ஐந்து படையினர் காயமடைந்ததாகவும் கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கள் மீது பலவித எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் மூவர் காயமடைந்தனர். அதிர்ச்சியினால் ஒருவர் மரணமடைந்தார்.

ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட இவ் எறிகணைகள் வண்ணாங்கேணி, கிளாலி புலோப்பளை போன்ற இடங்களில் வீழ்ந்து வெடித்தன.

இதில் புலோப்பளையில் வீழ்ந்து வெடித்த எறிகணை

உழவு இயந்திர ... மகாலிங்கம் என்பவரோடு மற்றும். வே. ஜெயகுருநாதன், செ. பாலேந்திரன் (20) மற்றும் மாரிமுத்து[58] அரியாலை ஆகியோரும் காயமடைந்தனர்.

இதேவேளை, இயக்கச்சியைச் சேர்ந்த வி. வேலாயுதம் என்பவர் அதிர்ச்சியின் காரணமாக மரணமடைந்தார். (86)

# கிளாலிக் கடலில் கடற்படை விரட்டியடிப்பு

[கிளாலி]

கிளாலியில் நேற்று முன்தினம் கடற்புலிகளின் கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் மூழ்கிய கடற்படையின் இரு நீருந்து விசைப்படகுகளையும், பலியான படையினரையும் தேடும்பணியில் ஈடுபட்டமுயன்ற சிறிலங்கா கடற்படையினரின் மூன்று விசைப் படகுகள் மீது நேற்று பிற்பகல் 2 மணியளவில் கடற்புலிகள் கடும்தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலை அடுத்து கடற்படை படகுகள் பின்வாங்கிச் சென்றுவிட்டன. இதனைத் தொடர்ந்து இரு உலங்கு வானூர்திகளும், இரு புக்காரா விமானங்களும் இப்பகுதியில் மாறிமாறி தாக்குதல் நடத்தின.


ஊர்காவற்றுறை நாரந்தனை

அருள்பெருகு

தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி

**அம்பாள் ஆலயம்**

**இரதோற்சவ தின வழிபாடு**

30-08-1993 திங்கள் காலை 9-00 மணி

மேற்படி வழிபாடு நல்லூர் முத்திரைச் சந்திக்கும், கச்சேரிக்கும் இடையில் உள்ள கச்சேரி நல்லூர் வீதியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அனைவரும் கலந்துகொண்டு அருள்பெறுவோமாக.

-சைவமகாசபை

(5795) (நாரந்தனை)



Modern Education Centre

Karaveddy.

**A/L 94**

**துரித மீட்டல் வினாவிடை**

**வகுப்புக்கள் ஆரம்பம்**

காலம்:- 28-08-1993 [சனி]

நேரம்:- 3-15 பி. ப.

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | - | திரு. கணேசன் |
| இரசாயனவியல் | - | திரு. செல்வா |
| தூய கணிதம் பிரயோக கணிதம் | ) | திரு. வேலாயுதம் (வெக்ரர்) |
| விலங்கியல் | - | திரு. ஞானேந்திரன் |

(3445)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## விமானப்படை

கும் கந்தையா அருளம்பலம் (60) ஆகியமூன்றுபொதுமக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இப்பகுதியிலிருந்த பல வீடுகளும், கடை ஒன்றும் சேதமடைந்தன.

நண்பகல் 12 30 மணியளவில் சித்தன்கேணிப் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் மூன்றுபொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். பொன்னுத்துரை முத்துசாமி (40), சுப்பிரமணியம் சர்வகுலராசா (53) இவரது மனைவி சகுந்தலா தேவிவயது 45 ஆகியோரே பலியானவர்களாவர். இவர்களது சடலங்கள் கருகிய நிலையில்காணப்பட்டன.

இதேவேளை புக்காரா விமானங்களிலிருந்து வீசப்பட்ட குண்டுகளில சில காட்டுப்புலம் பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்பட்டன. நேற்றைய விமானத் தாக்குதல்களை அடுத்து சுழிபுரம், பெரியபுலோதிக்கரை, காட்டுப்புலம். இறாத்தலடி, குடாக்கனை, பறாளாய், பனிப்புலம், வடலியடைப்பு பகுதிகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் பாதுகாப்புத் தேடி அயல் கிராமங்களுக்கு இடம்பெயர்ந்தனர். [41, 09, 11]

ஆனால் மக்களுக்கு இது உண்மையிலேயே வேகத்தையும், விடுதலையின் அவசியத்தையும் உணர்த்துகிறது. இதனால் போராட்டம் தீவிரப்படுவதையே எம்மால் காணமுடிகிறது என்றார்.

கிளாலி பாதை தொடர்பாக கேள்விக்குப் பதிலளிக்கையில் அது பொதுமக்களால் நடத்தப்படும் படகுச் சேவை அதை நாம் ஒழுங்குபடுத்தி சரியான முறையில் ஒரு நிர்வாக ரீதியாக ஒழுங்குபடுத்துகின்றோம். கிளாலி கடனீரேரியால் போக்குவரத்து செய்யும் மக்களை அரசபடை தாக்குவதால் எமது கடற்புலி படையணி மக்களுக்கு அங்கு நின்று பூரண பாதுகாப்பை அளிக்கிறது எனத் தெரிவித்

## பறாளாய்

தேர்முட்டி ஆகியன சேதமடைந்தன இதன் கிழக்கு புறமாக இருந்த ஐக்கிய நாணய சங்க கட்டடமும் சேதமடைந்தது.

டாங்கியின் மற்றைய இரு பீரங்கிக் குண்டுகள் ஆலயத்தின் மீது வீழ்ந்து வெடித்ததால் ஆலய வசந்த மண்டபம் இடிந்து நொருங்கியது. அதன் முன்மண்டபமும் சேதமாகியது வடக்கு புறத்தில் அமைந்திருந்த ஆலய குருக்களின் வீடும் சேதமடைந்தது.

இத்தாக்குதல்கள்நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் ஆலய மூலஸ்தானத்திற்குள் பதுங்கிக் கொண்டதால் எதுவித உயிர்ச்சேதங்களுமின்றித் தப்பித்துக் கொண்டனர். இவர்கள் அனைவரும் சுமாரி இருமணி நேரமாகதாம் மூலஸ்தானத்திற்குள்ளேயே பதுங்கியிருந்ததாக தெரிவித்தனர்.

## கடற்புலி

வீதி. பருத்தித்துறை வீதி ஆகியவற்றூடாக நெல்லியடியை வித்துடல்கள் சென்றடைந்தன. பின்னர் வடமராட்சியின் பல பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக கொண்டு செல்லப்பட்டு இறுதியில் வடமராட்சி மாவீரர் துயில் இல்லத்தை சென்றடைந்த புகழுடல்கள் விசேட மேடையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று மாவீரர் நினைவாக நினைவுக்கல் நாட்டப்பட்டது. புகழுடல்கள் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டன.

இம் மாவீரர்களின் உருவப் படங்கள் வீதிகளின் முக்கிய சந்திகளில் வைக்கப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சோக இசைகளும் ஒலிபரப்பப்பட்டன.

போர்க் கைதிகள் தொடர்பான கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அரசியல் துணைப் பொறுப்பாளர், கைதிகள் விடுதலை தொடர்பாக எமது இயக்கம் புதிய நிபந்தனை எதையும் விதிக்கவில்லை இப்பிரச்சினை சம்பந்தமாக எம்முடன் பேச்சு நடத்திய பிரிகேடியர் வீரசேகராவிடம் ஒரேயொரு கோரிக்கையையே முன்வைத்தோம். அதாவது வடபகுதிக்கு சில அத்தியாவசியப் பொருள்களை இங்கு அனுமதிக்குமாறு கேட்டிருந்தோம் அரசு இதற்கு முதலில் எழுதியது இது தொடர்பாக அரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கையும் ஆவணங்களும் எம்மிடம் உள்ளன ஆனால் அரசாங்கம் தான் தனது நிலைப்பாட்டைமாற்றி பொருளாதார தடையை அகற்ற மறுக்கது எனவே அரசு தான் அளித்த வாக்குறுதியை காப்பாற்றவில்லை. புலிகள் இயக்கம் புதிய கோரிக்கைகளை முன்வைக்கிறது. என அரசு கூறுவது விசமத்தனமான பிரசாரம் ஆனால் இதே வேளை மனிதாபமான அடிப்படையில் எமது தலைவர் பிரபாகரன் அவர்கள் மொத்தத்தில் ஏழு கைதிகளை விடுதலை செய்தார். இது எம் இயக்கத்தின்நல்லெண்ணத்தை காட்டுகிறது எனத் தெரிவித்தார்.

இவ்விவகாரம் முடிந்துவிட்டதா அல்லது இரு தரப்பினரும் இன்னமும் பேச்சு நடத்துகின்றனரா எனக் கேட்ட போது அப்படி பேச்சுக்கள் ஏதும் நடைபெறுவதாக தெரியவில்லைஎன்றார்.

பூநகரி விவகாரம் தொடர்பாக கேட்டபோதுபூநகரிபாதை தொடர்பாக நாமயூ என் எச் சி ஆர் பிரதிநிதியுடன் பேசினோர் ஆனால் எமது நிலைப்பாட்டை தெளிவாக்கினோம் அதாவது பூநகரி பாதையால் பொருள்கள் மாற்றவும் கடும் நோயாளிகளை கொண்டு செல்லவும் இணங்கினோம் எமது நிலைப்பாட்டை தெளிவாக கூறியிருந்தோம் ஆனால் யூ என். எச். சி ஆர். பிரதிநிதிகள் அரசுடன் கதைத்து முடிவுடன் வருவதாக கூறினர். பின் எம்முடன் வந்து பேசியபோது புதிய சில அரசின் கருத்துக்களை பரிசீலனைக்கு தந்தனர். அதில் இராணுவ முகாம் இருக்கும் என்றும் ஆனால் மக்கள் போக்குவரத்தை அனுமதிக்க வேண்டும் என்றும் இதன்போது இராணுவம் சோதிக்கும் என்னும் கைது செய்வர் என்னும் கருத்துக்கள் காணப்பட்டன. இது அரசின் ஆக்கிரமிப்பை ஏற்பதாக இருப்பதால் அக்கோரிக்கை குறித்து தெளிவாக விளக்கினோம்.

பழைய மாணவர்கள் மற்றும்


# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்: 28-4 24 கிறிஸ்துவின் மடியில்: 28-7-93

## இரத்தினசிங்கம் பாக்கியம்

(முன்னாள் பூநகரி இன்ஸ்பெக்டர் தோட்ட உரிமையாளர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும். பண்போடும் வளர்த்து, நல்வழி காட்டி, பாசத்துடன் சீராட்டி வளர்த்த எமது அன்பு மாமியே, எங்களை விட்டு பிரிந்து மாதம் ஒன்று போனாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மாறாது மறையாது. ஆகிலும் உங்கள் ஆத்மா ஆண்டவரிடம் சேர்ந்ததையிட்டு மன ஆறுதலடைகின்றோம்.


அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அனுதாபச்செய்திகள் அனுப்பியும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவரிற்கும் எமது உளமார்ந்த நன்றியினை தெரிவிக்கின்றோம்.

இத்துடன் இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி, குடும்பத்தினர்.
கொக்குவில். (5769)



# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1936 - 08 - 25

மறைவு: 1992 - 09 - 10

மாதனை, தெல்லிப்பழை

## பூதப்பிள்ளை இராஜகோபால்

(முன்னைநாள் இ. போ. ச. நடத்துநர்)

திதி: சதுர்த்தசி 30-08-1993

இல்லமிழந்தோம் இயற்கைச் செல்வமிழந்தோம்
ஊரிழந்தோம் உற்றார்தனைப் பிரிந்தோம்
உங்களையும் இழந்தோம்.
எங்கள் நெஞ்சம் நிறைந்தவரே - அன்புத் தெய்வமே!
பாசமுள்ள எம் இனிய அப்பாவே!
உங்கள் நினைவுகளை நெஞ்சில் நிறுத்தி
கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

அருமைத் தாய், அன்பு மனைவி,
மில் லேன், பிள்ளைகள், சகோதரர்,
மல்லாகம். உறவினர், நண்பர்கள்.
29-08-93 (7302)